1979 நவம்பர் 5]

அரிசன மாணவர் விடுதிகளில் உள்ள சமையல்காரர்களது சம்பளம்

* வினா எண் 116 — திரு. வே. கருணாமூர்த்தி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) அரிசன மாணவர் விடுதியில் பணியாற்றும் சமையல்காரர்களுக்கு, வழங்கும் சம்பளத்தை உயர்த்தும் உத்தேசம் அரசிற்கு உண்டா ?

(ஆ) தற்போது, எவ்வளவு சம்பளம் வழங்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :—

(அ) அரிசன மாணவர் விடுதியில் பணியாற்றும் சமையல்காரர்களுக்கு வழங்கும் சம்பளத்தை மேலும் உயர்த்தும் உத்தேசம் தற்போது அரசுக்கு இல்லை.

(ஆ) அரிசன மாணவர் விடுதியில் பணியாற்றும் சமையல்காரர்கள், தற்போது மாதம் ஒன்றுக்கு ரூ. 60/– (இலவச உணவுடன்) 10 மாதங்களுக்கும், ரூ. 80/– (இலவச உணவு இல்லாமல்) இரண்டு மாதத்திற்கும் பெறுகின்றனர். உதவி சமையல்காரர்கள் மாதம் ரூ. 55/– (இலவச உணவுடன்) 10 மாதங்களுக்கும், ரூ. 75/– (இலவச உணவு இல்லாமல்) இரண்டு மாதங்களுக்கும் பெறுகின்றனர்.

திரு. நா. பழனிவேல் : அரிசன மாணவர்கள் விடுதியில் தங்கிப் பயிலக்கூடிய மாணவர்களுக்குச் சமைத்துப் போடும் சமையல்காரர்களுக்கு மிகவும் குறைந்த சம்பளம் கொடுக்கும் காரணத்தால் விடுதிக் காப்பாளர்கள் செய்யக்கூடிய ஊழல்களுக்கு அவர்களும் உடந்தையாக இருக்கிறார்கள் என்று அறிகிறேன். இதனால் அங்கு பயிலக்கூடிய மாணவர்களின் உணவு மிகவும் குறைந்து விடுகிறது. ஆகவே, அவர்களுக்கு ஒழுங்கான முறையில் எவ்வளவு சம்பளம் கொடுக்க வேண்டுமோ அந்த அளவுக்குக் கொடுத்து அவர்களுக்கும் சாப்பிடுவதற்கான உணவை அந்த விடுதியில் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அந்த விடுதிகளில் பணியாற்றக்கூடிய சமையல்காரர்களுக்குத் தற்போது உணவும் கொடுக்கப்பட்டு வருகிறது. அவர்களுடைய ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்று தாழ்த்தப்பட்டோர் நலத்துறை இயக்குநர் மூன்றாவது ஊதியக் குழுவுக்குப் பரிந்துரை செய்தார். குழு ஏற்றுக்கொள்ளவில்லை.

திரு. இரா. ச. முனிரத்தினம் : அரிசன மாணவர்கள் விடுதியில் சமைக்கிற சமையல்காரர்கள் சில சில இடங்களில் வயதானவர்களாகவும், கண் தெரியாமலும் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் மாற்றி நல்லவர்களாகப் போட உத்தேசம் இருக்கிறதா?

[1979 நவம்பர் 5

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல் கண் தெரியாதவர்களும், வயதானவர்களும் இருக்கிறார்கள் என்றால் மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி ஏற்கனவே சொன்ன புகார் பற்றி நினைக்கும்போது ஒரு விதத்தில் அவ்வாறு இருப்பதும் நல்லதுதான்.

திரு. க. சுப்ரவேலு : இந்த விடுதிகளிலே பணிபுரிகிற சமையல்காரர்களுக்கு 50 ரூபாய் 60 ரூபாய், என்ற அளவிலே தான் சம்பளம் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள், அரசுத் துறைகளில் எல்லாம் போராட்டங்கள் நடைபெற்று அவர்களுடைய ஊதியங்கள் உயர்த்தப்பட்டுள்ள இந்த நேரத்தில் மிகக் குறைந்த அளவுக்கு எண்ணிக்கையுள்ள 100 அல்லது 150 பேர்தான் அந்த வேலையில் இருப்பார்கள். இவர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுப்பதன் மூலம் நிதி நிலையை அது பெருமளவு பாதித்துவிடாது. அவர்களும் வாழ வேண்டும், அவர்கள் பிள்ளைகளும் படிக்க வேண்டு மென்ற வகையில் அவர்களுக்குச் சம்பளத்தைக் கூட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : குறைகளைப் போக்க கவனம் செலுத்தி மூன்றாவது ஊதியக் குழுவுக்குப் பரிந்துரை செய்யப்பட்டது. அந்தக் குழுவினர் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தத் துறையைப் பொறுத்தவரை அவர்கள் மேல் பரிதாபம் இருக்கிறது, ஆனால் பணம் இல்லை.

திரு. பொ. உத்திராபதி : அரிசன மாணவர் விடுதியில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கும் குறைந்த பணந்தான் கொடுக்கப்படுகிறது. மாணவர்கள் உயிரைப் பாதுகாக்கிற சமையல் வேலை செய்யக்கூடிய தொழிலாளிகளுக்கும் மிகக் குறைந்த சம்பளந்தான் கொடுக்கப்படுகிறது. திருத்துறைப்பூண்டியிலும் அந்த நிலை இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். விலைவாசி இந்த அளவுக்கு ஏறியிருக்கும்போது அவர்கள் எப்படி 60 ரூபாயிலும், 75 ரூபாயிலும் வாழ முடியும்? அரிசன நலத் துறையில் நிதி இல்லை. பணப்பற்றாக்குறை என்று அமைச்சர் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நிதியமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். தமிழகத்தில் ஒதுக்கப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் அரிசன மக்கள். அந்த மக்கள் முன்னேற நிதி இலாகா அரிசனத் துறைக்கு அதிகமான நிதி கொடுத்து அந்தச் சமையல்காரர்களுக்கு அதிகமான சம்பளம் கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இருக்கிற நிலைமையைத்தான் நான் சொல்லுகிறேனே தவிர, இன்னும் கூடுதலாக சம்பளம் வழங்க வேண்டுமென்பதுதான் இந்தத் துறையின் கருத்தாகும். இதற்காகத்தான் மூன்றாவது ஊதியக் குழுவுக்குப் பரிந்துரை செய்தோம். அவர்கள் ஏற்றுக்கொள்ள

வில்லை. ஆகவேதான் அதிகச் சம்பளம் தர இயலவில்லை. அதிக நிதி கிடைக்கும் நேரத்தில் நிச்சயமாக இந்தத் துறை அனுதாபத்துடன் பரிசீலிக்கும்.

(முற்பகல் 10•20)

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, அந்த விடுதியிலே பணியாற்றுபவர்களுடைய கோரிக்கை நியாயமானது என்று துறை ஏற்றுக்கொண்டிருக்கிறது. துறை பரிந்துரை செய்திருக்கிறது. ஆனால், ஊதியக் குழு அதை நிராகரித்துவிட்டிருக்கிறது. ஊதியக் குழு சொல்வதையெல்லாம் ஏற்றுகொள்ளவேண்டுமென்ற கட்டாயம் அரசுக்கு இல்லை. அதேபோன்று ஊதியக்குழு நிராகரித்துவிட்டதையெல்லாம் அரசும் நிராகரிக்கவேண்டும் என்பது அவசியமில்லை, அரசுக்கு நியாயமானது என்று தெரிந்தால் ஏற்றுக்கொள்ளலாம். அவர்களுக்கு குறைந்த பட்ச சம்பளம் கொடுப்பது நியாயமானது என்பதை துறை ஏற்றுக் கொள்கிறது. ஆனால், நிதிப் பற்றாக்குறை என்று சொல் சிறார்கள், அவர்களுக்கு நிதிப் பற்றாக்குறை, நிதியமைச்சருக்கு அதிகாரப் பற்றாக்குறை, முதலமைச்சருக்கு நேரப் பற்றாக் குறை இப்படியே பற்றாக்குறையாக ஒவ்வொன்றும் இருந்தால் நாட்டிலே என்ன நடவடிக்கையை அரசு எடுக்கமுடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். முதலமைச்சர் இருக்கிறார்கள், நிதியமைச்சர் இருக்கிறார்கள். அந்தத் துறையிலே பணியாற்று கிறவர்களுக்கு குறைந்த பட்ச சம்பளம் கொடுக்கப்படவேண்டும் என்று துறையே சிபாரிசு செய்திருக்கிறது, ஆனால் ஊதியக் குழு ஏற்றுக் கொள்ளவில்லையென்பதற்காக விட்டுவிடாமல், அமைச்சர் களுக்கு கூட்டுப் பொறுப்பு இருக்கிறது, அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை).

காவேரிப்பட்டினம் தொகுதியில் பாசன வசதி.

*வினா எண். 117 டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா?

(அ) தர்மபுரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதியில் 'ரிவர் பம்பிங் ஸ்டேஷன்' மூலம் தென்பெண்ணை ஆற்றிலிருந்து பாசன வசதியுண்டாக்கும் செயல்திட்டம் அரசிடம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதற்கென ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) & (ஆ) வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டத் தின்கீழ் (Drought Prone Areas Programme) ரூ. 6.09 இலட்சம் மதிப்பீடு கொண்ட தென்பெண்ணை ஆற்றில் இருந்து